**ஏப்ரல் - 19**

**"இருதயத்தின் நிறைவினால் வாய்பேசும். நல்ல மனுஷன் இருதயமாகிய நல்ல பொக்கிஷத்திலிருந்து நல்லவைகளை எடுத்துக் காட்டுகிறான். பொல்லாத மனுஷன் பொல்லாத பொக்கிஷத்திலிருந்து பொல்லாதவைகளை எடுத்துக் காட்டுகிறான்."**

**- மத் 12 : 34, 35.**

அப்படியானால், நமது முதல் அக்கறை இருதயத்துக்கானதாக இருக்க வேண்டும். அதனுடைய பற்றுதல்களும் குணங்களும் முற்றிலுமாக தெய்வீக கிருபையின் கட்டுப்பாட்டிற்குள்ளே இருக்கவும் சத்தியம், நீதி, இவைகளின் ஒவ்வொரு தத்துவமும் அங்கே சிம்மாசனத்திலேற்றப்படவும், நீதி, தயை, இரக்கம், சகோதர சிநேகம், அன்பு, விசுவாசம், சாந்தம், தன்னடக்கம், தேவனுக்கும் கிறிஸ்துவுக்கும் பிரதானமான பயபக்தி, பரிசுத்தத்தின் எல்லா அழகிற்கும் ஆர்வமுள்ள அன்பு ஆகிய இவைகள் ஜீவியத்தின் ஆளும் தத்துவங்களாக ஸ்திரமாக ஸ்தாபிக்கப்படவும் வேண்டும். இந்தத் தத்துவங்கள் இருதயத்தில் நிலைப்படுத்தப்பட்டு ஸ்தாபிக்கப்பட்டிருந்தால், பிறகு இருதயமாகிய நல்ல பொக்கிஷத்திலிருந்து, சத்தியதையும், சொஸ்த புத்தியுமுள்ள வார்த்தைகளையும், ஞானம் போதிக்கும் வார்த்தைகளையும், கிருபையின் வார்த்தைகளையும் எடுத்து வாய் பேசும்.

**-Z '96, 30(R 1937).**

நமது இருதயமே நம்முடைய வார்த்தைகளுக்கும் செய்கைகளுக்கும் ஊற்றாயிருக்கிறது. ஆகையால் ஒருவனுடைய வார்த்தைகளும், செய்கைகளும் இருக்கிற வண்ணமாக, அவனுடைய இருதயம் இருக்கிறது. ஒரு நல்ல இருதயத்திலிருந்து நல்ல வார்த்தைகளும் நல்ல செய்கைகளும் வழிந்தோடும், கெட்ட இருதயத்திலிருந்து தீமையான வார்த்தைகளும், செய்கைகளும் வழிந்தோடும். ஆகையால் இருதயத்தை சுத்தமாக வைத்திருப்பது எவ்வளவு அவசியமாக இருக்கிறது! கர்த்தரைப் பின்பற்றுகிற எல்லாருக்கும் நிச்சயமாகவே இந்த எச்சரிக்கை ஏற்றதாக இருக்கிறது. எல்லா காவலோடும் உன் இருதயத்தைக் காத்துக்கொள். அதனிடத்தினின்று ஜீவ ஊற்று புறப்படும். (நீதி 4 : 23).

**-P '34, 37.**

**ஒத்த வாக்கியங்கள் :-**

லூக் 6:45; சங் 37:30; நீதி 10:20; 12:6,17-19; 15:4,23; உபா 5:29; 6:5,6; 1சாமு 16:7; 1நாளா 28:9; 2கொரி 12:14; சங் 51:10; எரே 17:9,10; மத் 5:8; 12:33,36,37; 15:18-20; 23:26; எபி 3:8.

**கோபுர வாசிப்பு** : Z '06, 92(R 3746).

**வினாக்கள்** : இந்தப் பாடத்தின்படி இந்த வார அனுபவங்கள் என்ன? இந்தப்பாடம் உண்மையென்று இந்த வார அனுபவங்கள் எப்படி நிரூபித்துக்காட்டின? பலன்கள் என்ன?